A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 04 / 2025</u>**

திருமதி K. சாரதா, க/பெ. M. கார்த்திகேயன்,
கதவு எண் 118/A1, அய்யாகவுண்டர் தெரு,
வாழப்பாடி (வ), சேலம் மாவட்டம் – 636 115.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு K. முருகன்)

எதிர்

1. உதவி மின்பொறியாளர்/ புத்திரகவுண்டம்பாளையம்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
82, C(பழைய), 121 (புது) சூப்பர் வளாகம்,
புத்திரகவுண்டம்பாளையம் அட்டூர் தாலுக்கா,
சேலம் – 636 119.

2. செயற்பொறியாளர்/ இ&ப/வாழப்பாடி,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
110/22 KV SS சிங்காபுரம், வாழப்பாடி, சேலம் மாவட்டம் – 636 115.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு R. கார்த்திகேயன், உதவி மின்பொறியாளர்/ புத்திரகவுண்டம்பாளையம், (i/c)
திரு M. பாலசுப்பிரமணியம், செயற்பொறியாளர்/ இ&ப/வாழப்பாடி, (i/c))

**<u>மனு பெறப்பட்ட நாள்: 02-01-2025</u>**

**<u>கேட்புரை நாள்: 12-02-2025</u>**

**<u>ஆணை நாள்: 17-02-2025</u>**

02.01.2025 அன்று பெறப்பட்ட திருமதி K. சாரதா, க/பெ. M. கார்த்திகேயன், கதவு எண் 118/A1, அய்யாகவுண்டர் தெரு, வாழப்பாடி (வ), சேலம் மாவட்டம் – 636 115 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 04/2025 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 12.02.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளர் தன்னுடைய சர்வே எண் 46/4A1 கொண்ட நிலத்தில் நிறுவப்பட்ட மின்கம்பங்கள் மற்றும் மின்பாதையை உரிமைதாரரின் செலவில் மாற்றியமைக்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய சர்வே எண் 46/4A1 கொண்ட நிலத்தில் நிறுவப்பட்ட மின்கம்பங்கள் மற்றும் மின்பாதையை உரிமைதாரரின் செலவில் மாற்றியமைக்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

2.2 மின்கம்பங்கள் நிறுவப்பட்ட காலகட்டத்தில் அப்போதைய நிலத்தின் உரிமையாளரின் ஒப்புதலின் பேரில் அமைக்கப்பட்ட மின்கம்பங்களை மாற்றியமைக்க விரும்பினால் பங்களிப்பு வைப்பு முறையில் விண்ணப்பம் அளித்து அதற்கான மதிப்பீட்டுத் தொகையினை செலுத்தும் பட்சத்தில் மாற்றியமைக்க இயலும் என எதிர்மனதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதிலில் திருப்தி இல்லாததால் மேல்முறையீட்டாளர் சேலம் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 19.08.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சேலம் மின்பகிர்மான வட்டம் 08.10.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 சேலம் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 08.10.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*""மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரர் தரப்பு மற்றும் வாரிய தரப்பு வாதங்கள் மற்றும் கோப்புகளை ஆய்வு செய்து இம்மன்றத்தில் கீழ்க்கண்டவாறு தீர்வு வழங்கப்படுகிறது.*

*மனுதாரர் திருமதி.சாரதா பெயரில் ஜீலை 2021–ல் வாங்கியுள்ள நிலத்தில் ஏற்கனவே மின் கம்பங்கள் இருந்ததாக தெரிவித்து அதனை ரோடு ஓரமாக மாற்றியமைக்க கோரினார்.*

*ஆனால் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பு (6)(1)–*

*The cost of shifting servicer line, structure and equipments shall be borne by the consumer. The consumer shall pay the estimated cost of shifting in advance in full. The copy of the estimate shall be given to the consumer. The shifting work will be taken up only after the payment is made–ன்படி*

*நிலத்தின் உரிமையாளர் பங்களிப்பு வைப்பு (DCW) முறையில் விண்ணப்பம் அளித்து அதற்கான மதிப்பீட்டுத் தொகையினை செலுத்தும் பட்சத்திலே அவரது நிலத்திலுள்ள மின் கம்பங்களை மாற்றி அமைக்க இயலும். எனவே DCW விண்ணப்பம் அளித்து மதிப்பீட்டுத் தொகையை செலுத்தி மின் கம்பங்களை மாற்றியமைத்துக் கொள்ள மனுதாரருக்கு இம்மன்றம் உத்திரவிடுகின்றது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 12.02.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு K. முருகன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு R. கார்த்திகேயன், உதவி மின்பொறியாளர்/ புத்திரகவுண்டம்பாளையம், (i/c) மற்றும் திரு M. பாலசுப்பிரமணியம், செயற்பொறியாளர்/ இ&ப/வாழப்பாடி, (i/c) சேலம் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் இம்முறையீட்டு மனுவிற்கு சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 சேலம் (மா) பெ.நா.பாளையம் (வ) மேட்டுடையார்பாளையம் கிராம சர்வே எண் 46/3A மற்றும் 46/4A1ல் தனது அண்ணன் திரு K. முருகன் மூலமாக அலுவலர்கள் வாயிலாக RTI மூலம் விதிமீறல்கள் குறித்து கண்டறிய பல ஆவணங்களை பெற்று, பொருளுக்குரிய புகாரினை மன்றத்திற்கு அவரின் வாயிலாக அளித்ததாகவும், அவரது மனு ஏற்கப்பட்டு கடந்த 12.07.24 ல் நடைபெற்ற முகாமில் அழைப்பாணையின் பேரில் கலந்து கொண்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 சேலம் (மா) ஆத்தூர் (வ) கஸ்பா ஆத்தூர் டவுன், அருணகிரிநாதர் தெருவில் வசித்து வரும் திரு.கோபால் என்பவர் கடந்த 23.10.2020–ல் சேலம் (மா) பெ. நா. வட்டம். மே.உ.பாளையம் சர்வே எண்.46/4A நிலம் வாங்கி அதில் தனக்குறிய 1 ஏக்கரில் பிளாட்டுகளாக பிரித்து அதிலுள்ள புதிய வீட்டிற்கு தெருமுகப்பான தார்சாலைக்கு கிழபுறமுள்ள மாதேஸ்வரன் அருகாமையில் உள்ள என்பவரது நிலத்திலிருந்து தார்சாலைக்கு மேற்கேவுள்ள புதிய வீட்டிற்கு இணைப்பு பெற விண்ணப்பித்த போது அதற்கு மாதேஸ்வரன் 09.07.21ல் AE க்கு ஆட்சேபனை கடிதம் (AE சான்றிட்ட ஆட்சேபனை கடிதம் உள்ளது) அளித்துள்ளதில் அவருடைய நிலத்திலிருந்து இணைப்பு பெற ஆட்சேபனை தெரிவித்ததோடு மட்டுமில்லாமல் பொதுப் பாதையான சர்வே எண். 23/3A அரசு நிலமான தார்சாலைக்கு மேற்கேவுள்ள கோபால் நிலத்தையொட்டி தார்சாலை மேற்கிலும் ஓரமாக மாதேஸ்வரனுக்கு சம்பந்தமே இல்லாத இடத்திலும் மின்

கம்பம் அமைத்து தர ஆட்சேபனை கொடுத்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 திரு. மாதேஸ்வரன் நிலத்தையொட்டியுள்ள தார்சாலையானது அபிநவம் கிராம எல்லைக்குட்பட்ட உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண் 23/3A அரசு நிலமான பொதுப்பாதையாகும் (சர்வே எண். 23/3A நிலவியல் பொது பாதை என்பதற்கான அபிநவம் கிராம, VAO சான்றிட்ட 'அ' பதிவேடு சான்று உள்ளது), அதில் கடந்த 2015-2016 ஆம் ஆண்டு பெ. நா. பாளையம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் (PIO/Dy BDO P.N.Palayam Letter No.ந.க.எண்.3105/2022அ4 நாள் :08.05.23) தார்சாலை அமைக்கப்பட்டுள்ளதாகவும், கோபாலிடமிருந்து தாங்கள் கிரையம் வாங்கும் நிலத்திற்குள் தென்னை மரங்கள் நடுவதற்கு ஏதுவாக இடத்தை சுற்றிலும் கம்பி வேலி போடப்பட்டு குழிகள் அமைத்து இருந்ததாகவும், ஆட்சேபனை தெரிவித்த மாதேஸ்வரன் என்பவருக்கு அவருடைய வீட்டு மின் இணைப்பே அவர் ஆட்சேபனை தெரிவித்த அதே திசையிலுள்ள மற்றொரு கம்பத்திலிருந்து தான் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதுமட்டுமில்லாமல் கோபால் என்பவருக்காக 04 மின் கம்பங்கள் அமைக்கும்போது ஆட்சேபனை தெரிவித்த திசையோடு மட்டுமில்லாமல் எதிர்திசையில் மாதேஸ்வரனால் முறைகேடாக எடுத்துச்சென்ற வயரை கூட கம்பங்கள் அமைக்க (படங்கள் உள்ளது) வழிவிட அகற்ற சொல்லாமல், தார்சாலையை ஒட்டி அமைக்காமல் அவ்வளவு கன கச்சிதமாக அவருடைய ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டு விவசாய நிலத்தில் (07/08/21) நட்டு மின் வாரிய அதிகாரிகள் விதிகளை மீறி அடுத்தவர்களுக்கு பாதிப்பை உண்டாக்கி விட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மாதேஸ்வரனின் உள்நோக்கம் கொண்ட போலியான நியாயமற்ற சட்ட விரோத ஆட்சேபனையை புறந்தள்ளாமல் மின்வாரிய விதிகளின்படி குறைவான செலவினம் மற்றும் குறுகிய மின்பாதையில் பாதிப்பில்லாமல் மின் இணைப்பு கொடுக்காமல் 'இடத்துக்காரர்கள் ஆளில்லாததை சாதகமாக பயன்படுத்தி முன் அனுமதி ஏதும் பெறாமல், கலந்து யோசிக்காமல் அடுத்தவர்களுக்கு இடையூறு செய்யும் நோக்கில் ஆட்சேபனையை மின் வாரிய அதிகாரிகள் அப்படியே ஏற்றுக் கொண்டு பிளாட்டுகளாக பிரித்து விற்பனை செய்ய உள்ள இடத்தில் தெருமுகப்பான காலியாக உள்ள அரசு

நிலமான பொதுப்பாதையில் அமைக்காமல் தங்களுக்குரிய இடத்தின் வழியாக வேலியை உடைத்து குழிக்குள் ஏற்கனவே 30 வருட காலமாக உள்ள தென்னை மரங்களக்கு அடியில் மின் இணைப்பு கோபாலுக்கு கொண்டு சென்ற பாதை மின் வாரிய சட்டத்தை மீறி நடந்த செயலாகும். "மேலும் கூடுதலாக மரங்கள் இல்லாத மாற்று பாதை தற்போதும் தளத்தில் உள்ளது". கம்பம் நட்டது தெரிந்த மறுநாளே தனது சகோதரர் திரு கே.முருகன் ஆட்சேபனையை தெரிவித்து உள்ளதாகவும், அதன் பதிவை கடந்த 13.07.23ல் K.முருகன், உதவி பொறியாளருக்கு அனுப்பி உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 இதே சமயத்தில் சம்பவ நிலத்திலேயே கோபாலுக்கும் மற்றவர்களுக்கும் நிலம் சம்பந்தமாக அதே மாதேஸ்வரனால் சட்ட விரோத பிரச்சினை ஏற்பட்டு கடந்த 26.08.21–ல் ஒரு முடிவு எட்டப்பட்டவுடன் தனது தந்தை A.Krishnan அவருக்குரிய இடத்தை 20.09.21ல் கிரயம் பெற்றார் இதே ஊரில் விவசாய மாடுகள் வைத்து உழவு தொழில் செய்த தனது தந்தை மாற்றுதிறனாளி என்பதால் ரோடு சம்பந்தமாக பிரச்சினை மற்றும் புதிதாக வாங்கும் இடத்தில் குறுக்கில் கலந்யோசிக்காமல் கம்பம் நட்டது ஆகியவற்றால் இது சம்பந்தமாக பிரச்சினைகளை அவர் எதிர்கொள்ள முடியாத அவருக்கு மன சோர்வு ஏற்பட்டு தன்னிடம் விற்றுவிட்டதாகவும், தான் கடந்த 05.07.22ல் அந்த இடத்தை வாங்கியவுடன் ஆவணங்கள் வாயிலாக மாதேஸ்வரன் செய்த ஆட்சேபனையால் கோபால் தவறான உத்தரவாதம் அளித்து அதன் வாயிலாக உள்நோக்கம் கொண்ட போலியான நியாயமற்ற கூட்டு சதியின் ஆட்சேபனை வாயிலாக முறைகேடாக அமைக்கப்பெற்ற மின் கம்பங்கள் சம்பந்தமான குறையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற நோக்கில் ஆவணங்களை திரட்டும் பணியில் ஈடுபட்டு சேகரித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 அவ்வாறு சேகரித்த பின்பு தான் தங்களுக்கு ஆட்சேபனையாளருக்கு எப்படி எல்லாம் மின் வாரிய அதிகாரிகள் உதவி புரிந்துள்ளார்கள் என்பதும் மட்டுமில்லாமல் கோபாலால் பெறப்பட்ட மின்பாதையால் தங்களுக்கு மட்டுமில்லாமல் அதன் வழியே மின் இணைப்பு பெறும் அனைவருக்கும் பாதிப்பு உண்டாகும் வகையில் அமைக்கப்பட்டதை தான் தகுந்த ஆதாரங்களுடன் கூற கடமைப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மின் இணைப்பு பாதை கோபால் பெற்ற பின்பு அவரிடம் இடம் வாங்கிய திருமதி ராஜாமணி தன்னுடைய புதிய வீட்டிற்கு தற்காலிக மின் இணைப்பு (எண் 536 008 849) பெறும்போது கோபால் அமைத்த 94F தூரமேவுள்ள உ. பொறியாளர் சான்றிட்ட Drawing Map நகல் உள்ளது கம்பத்திலிருந்து திருமதி ராஜாமணிக்கு மின் இணைப்பு வழங்காமல் 120F தூரமுள்ள கம்பத்திலிருந்து அதாவது மாதேஸ்வரன் என்பவர் கோபால் என்பவருக்கு ஆட்சேபனை தெரிவித்த கம்பம் இணைப்பு 25/03/22ல் வழங்கப்பட்டு பின்னர் 12/07/23ல் திருமதி ராஜாமணி கணவர் திரு பொன்னுசாமி என்பவர் மின் இணைப்பு லைன் தூரமாக உள்ளது என அருகிலுள்ள கம்பத்திற்கு இடமாற்றம் கோரி மனு செய்ததாகவும், அதன் வாயிலாக கோபால் பெற்ற அதே 94F தூரமே உள்ள கம்பத்தில் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளதாகவும், 120F தூரமிருந்து மின் இணைப்பு வாரிய விதிகளுக்குட்பட்டு தான் வழங்கப்பட்டுள்ளதா என ஆராய வேண்டிய நிலை இப்போது ஏற்படுகிறதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மின் இணைப்பு எண்.536-006-714 பெற்ற திரு கோபால் என்பவர் அவர் மின் இணைப்பு பெறும்போது மாதேஸ்வரன் ஆட்சேபனை தெரிவித்தவுடன் உதவி பொறியாளர்/(இ&ப)/பு.க.பாளையம் அவர்களுக்கு 09.07.21ல் எழுதிய மனுவில் "எனது கிணற்று மின் இணைப்பு உள்ள மின்கம்பத்திலிருந்து என தவறான தகவல் கொடுத்துள்ளார் கோபால் என்பவர் சர்வே எண்.46/4A-ல் தான் இடம் வாங்கிய பின்னர் முதன்முதலாக வீட்டு மின் இணைப்பு பெறுகிறார் என்பதுதான் நிதர்சன உண்மை எனவும், ஆக அவருடைய மனுவின் உத்தரவாத தன்மையையும் கவனிக்காமல் களஆய்வையும் மேற்கொள்ளாமல் தவறான உத்தரவாதத்தால் விதி மீறல் நடைபெற்றது உறுதியாகிறதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 இதனால் மின் இணைப்பு பெறும்போது தவறான தகவல்களை ஆவணங்கள் வாயிலாக கொடுத்துள்ள கோபால் என்பவர் மீது, அவரே 09.07.21 அன்று ஒப்பமிட்ட மின்வாரிய படிவம் 1ல் உள்ள 2 மற்றும் 5 ன்படி மின்வாரிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்படுத்திட வேண்டும் எனவும், மாதேஸ்வரன் நபரை திருப்திபடுத்த அரசாங்க சொத்தான மின் இணைப்பை தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பு Notification No.TNERC/DC/8/1 Dated 21.07.2004 பிரிவு (4) பகிர்மான உரிமதாரரின் பணிகளான i & v க்கு மற்றும் (5) வலையமைப்பு விரிவாக்கத் திட்டமிடலின்

கட்டங்களின் viii க்கு மற்றும் (16) பணிப்பாதுகாப்பு கூறுபாடுகளுக்கு புறம்பாக நிறுவப்பட்டுள்ளது" இப்போது தான் நினைக்க தோன்றுகிறது மின்சார வாரியம் அரசுக்கு சொந்தமானதா இல்லை ஆட்சேபனையாளருக்கு சொந்தமானதா என்று? மின்சார வாரியத்துக்கென்று மின் பாதை மின் இணைப்பு வழங்க விதிகள் இல்லையா என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 இந்த நேரத்தில் மின் கம்பம் மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதறக்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்குள்ள அதிகார விதிமுறைகளாவது, மின்சார சட்டம் 2003, பிரிவு 164–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–ல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின் கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு GO(Ms) No.16 Energy (C3) Department Date:– 23.02.2012 ல் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே இது சம்பந்தமாக விதிமுறைகளை இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–ன் பிரிவு 10 ஐ ஆராய்வோம்:–

*"PART III*
*"Power to Place Telegraph Lines and Posts".*
*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along across, and posts in or upon, any immovable property*
*Provided That*
*1. The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the Purpoves of a telegraph establish Ector maintained by the 1 (Central Government), or to be so established or maintained,*
*2 The 1 (Central Government) shall not acquire any right other than that of user only in the property under, over, along, across, in or upon which the telegraph authority places any telegraph fine or post*
*3. Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority, and*
*4 In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property ather than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers."*

5.11 மேற்கூறிய இந்திய தொலைத்தொடர்பு சட்டத்தின் படி உரிமதாரர் பொது இடத்தில் கம்பங்கள் நடலாம் என்பது உறுதியாகிறது எனவும், இதேபோன்ற ஒரு வழக்கில் தமிழக மின்வாரிய ஒழுங்கு முறை ஆணையம் வழக்கு எண்.96/2022ல்

வழங்கியுள்ள தீர்ப்பில் "மின் கம்பங்கள் நட்டு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்த மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்க எதிர்மனுதாரர்களால் எடுக்கப்பட்ட முயற்சிகளை தடுக்க முயலும் அண்டை நிலத்துகாரரின் நடவடிக்கை முறையற்ற செயலாக கருதப்படுகிறது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 பொது வழி பாதையில் மின்கம்பங்கள் நிறுவ ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட இடமானது ஆட்சேபனைகாரர்களுக்கு சொந்தமானது அல்ல என தெரியவருவதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்று அவருக்கு வாரிய விதிமுறைப்படி விஸ்தரிப்பு பணிகள் மேற்கொண்டு மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தீர்வு செய்கிறேன் என தீர்வு வழங்கப்பட்டுள்ளதை உதாரணமாக எடுத்துக் காட்டுவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மேற்கூறிய ஒழுங்குமுறை ஆணையம் வழங்கிய முன்னுதாரங்களை கவனத்தில் கொள்ளாமல் ஆட்சேபனையாளருடன் உரிமதாரர் கைகோர்த்து கொண்டு செயல்பட்ட காரணத்தால் கோபால் தவறான உத்தரவாதம் அளித்து அவருக்கு உரிமையில்லாத சர்வே எண்.46/3A வழியாக அனைவருக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் மின் பாதையை ஏற்படுத்தும் போது மின் வாரிய விதிகளை மீறி இருப்பதால்தான் தாங்கள் புகார் மனு அளிக்க காரணம், பாதிப்பு இல்லையெனில் தாங்கள் ஏன் இவ்வளவு ஆதாரங்களுடன் கூறியும் தங்கள் நிலத்திருந்து கோபாலுக்கு அமைத்த மின் பாதையால் பிளாட்டுகாரர்களுக்கு அனைவருக்கும் வருங்காலத்தில் தென்னைமரங்களால் பாதிப்பு ஏற்படும் என முன்னெச்சரிக்கையாக குறையை போக்க நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்து தவறான தகவல்களை கொடுப்பது எவ்வகையில் நியாயமாகும் எனவும், மின் வாரிய அதிகாரிகள் பாதிப்பு உள்ள தங்களுக்கு உரிய முறையில் குறையை நிவர்த்தி செய்யாமல் தவறு செய்தவர்களுக்கு ஏன் துணை போக வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 கோபால் அவர்கள் சர்வே எண் 46/4A வில் உள்ள புதிய வீட்டிற்கு மின் இணைப்பு பெற அதே சர்வே எண்ணிலுள்ள விவசாய கிணற்றிலுள்ள மின் இணைப்பு கம்பத்திலிருந்து பெறுகிறார் என்றால் அவருக்கு அருகில் தனது சொந்தமான நிலத்தில்" என வார்த்தை எதற்கு வருகிறது? அப்படி என்றால் அருகிலுள்ள அவருடைய

சொந்தமான நிலத்தின் சர்வே எண்ணை ஏன் குறிப்பிட மறுக்கிறீர்கள்? இங்கே தான் அவருடைய தவறான உத்தரவாதமும் விதிமீறல்களும் நடைபெற்றதாக தான் கூறுவதில் உண்மை வெளிவருகிறது. எந்த ஒரு சாமானிய மனிதரால் கிராம பகுதியில் புதிதாக வீட்டு மின் இணைப்பு பெற 65,000/– (Estimate copy attested by AE is available) செலவு செய்து பெற முடியுமா எத்தனை பேர்கள் இதுபோன்று பெற்று உள்ளார்கள் எனவும், பிளாட்டுகளாக பிரித்து விற்பனை செய்ய உள்ள இடத்தில் தெருமுகப்பான காலியாக உள்ள அரசு நிலமான பொதுப்பாதையில் அமைக்காமல் தங்களுக்குரிய இடத்தின் வழியாக வேலியை உடைத்து குழிக்குள் ஏற்கனவே 30 வருட காலமாக உள்ள தென்னைமரங்களுக்கு அடியில் மின் இணைப்பு கோபாலுக்கு கொண்டு சென்ற பாதை மின் வாரிய சட்டத்தை மீறி நடந்த செயலாகும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 கோபாலிடம் மூத்த குடிமகளான திருமதி ராஜாமணி அவர்கள் சர்வே எண்.46/4A வில் ஒரு மனை வாங்கி (வாழப்பாடி சார்பதிவாளர் அலுவலக பத்திரப்பதிவு எண் 389/2022) புதிய வீடு கட்ட மின் இணைப்பு பெற விண்ணப்பித்த போது இணைப்பு எங்கே (No.536 008 849 (w.ef 25/03/2022) கொடுக்கப்பட்டிருக்க வேண்டும், தாங்கள் கூறியபடி கோபாலால் பெறப்பட்ட மிக அருகாமையிலுள்ள மின்கம்பத்திலோ அல்லது தாங்கள் கூறியபடி கோபாலுக்குரிய அருகிலுள்ள சொந்தமான நிலத்துக்கு சர்வே எண் 46/4A வில் உள்ள விவசாய மின் இணைப்பு உள்ள கம்பத்திலிருந்தோ தானே இணைப்பு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.16 அதனைவிட்டு பொதுப்பாதைக்கு கிழக்கே நிலமுள்ள எந்த திசையில் கோபாலுக்கு மாதேஸ்வரன் ஆட்சேபனை தெரிவித்தாரோ அதே திசையிலுள்ள தொலைவிலுள்ள கம்பத்திலிருந்து ஏன் இணைப்பு கொடுக்க வேண்டும் எனவும், இங்கே தான் கள ஆய்விற்கு வரும்போது விதிமீறல் உண்டா இல்லையா என்பது தெரிந்து விடும். கோபால் இணைப்பு பெற விண்ணப்பித்த போது மாதேஸ்வரனின் ஆட்சேபனை உள்நோக்கம் கொண்ட போலியான நியாயமற்ற சட்ட விரோத ஆட்சேபனையை புறந்தள்ளாமல் AE அதனை அப்படியே ஏற்றுக் கொண்டு உள்ளார் என தான் கூறிய மின்வாரிய சட்டத்தை மீறி நடந்த செயலாகும் தற்போது நீருபணமாகிறது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.17 அவ்வாறு கொடுக்கப்பட்ட பின்பு கோபாலால் பெறப்பட்ட மின் கம்பத்திலிருந்து இடமாற்றம் செய்து மின் இணைப்பு கொடுக்க வேண்டிய காரணமாக "தொலைவிலுள்ள மின் கம்பத்திலிருந்து" அருகாமையில் உள்ள கோபாலால் பெறப்பட்ட மின்கம்பம் வாயிலாக என திருமதி ராஜாமணி கணவர் திரு பொன்னுசாமி கூறி மனு (12/07/2023) கொடுத்ததை ஏற்று இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளதாகவும், தஅஉ/எண்.007/01/24–25 நாள்: 09.07.24 கடிதத்தில் 'தூரம் சிறிது என்பதால்" என ஏன் தவறான தகவல் தர வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.18 திருமதி ராஜாமனி, கணவர் திரு பொன்னுசாமி மின் இணைப்பு இடமாற்றம் செய்யப்படும் போது AE சான்றிட்ட (service wire pole to pole shifting Drawing skech Sanctioned by AEE) வரைபடத்கில் ராஜாமணி வீட்டிலிருந்து 120 F தூரத்திலிருக்கும் கம்பத்திலிருந்து கோபாலால் பெறப்பட்ட மின்கம்பம் வாயிலாக 94F அருகாமையிலிருக்கும் கம்பத்திற்கு மாற்றம் என கொடுத்துள்ள தகவல் தவறா அல்லது தங்களின் கடிதத்தில் குறிப்பிட்ட தூரம் சிறியதாக உள்ளதாக தகவல் தவறா? 120F தூரமென்ற வரைபடத்தின் படி அவ்வாறு இருக்கையில் வாரிய விதிகளின்படி தான் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதா? கள ஆய்வில் விதிமீறல் உண்டா இல்லையா என்பது தெரிந்து விடும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.19 தாங்கள் கடிதத்தின் அடிப்படையில் சிறிது தூரம் என்றால் பொதுப்பாதையாக உள்ள தார்சாலை வழியாக முன்பே சிறிது செலவில் கோபாலுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தால் தங்களது விவசாய நிலங்கள் மற்றும் அதன் வழியே செல்லும் யாருக்கும் எந்த வழியிலும் பாதிப்பு வராமல் தடுத்திருக்க முடியுமே? இங்கே தான் விடுமீறலா? மற்றும் ஆட்சேபனையாருக்கு பக்க பலமாக உதவியதாக மின்சார வாரியம் என தான் தகுந்த ஆதாரங்களுடன் கூற கடமைப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.20 இது சம்பந்தமாக விதிமீறல்களை களைய தாங்கள் அனுப்பிய RTI மனுவிற்கு பார்வையில் கண்ட தங்களின் 4 மற்றும் 5 க்கான RTI பதில் கடிதங்களில் முறையே 02.01.23 மற்றும் 23.01.23 ல் தாங்கள் சர்வே எண் 46/4A வில் தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் எவ்வித மின் இணைப்பும் கொடுக்கப்படவில்லை என தகவல் தந்தது

சரியா? தஅஉ/எண்.007/01/24-25 நாள்: 09.07.24 கடிதத்தில் சர்வே எண்.46/4A- ல் கோபாலுக்கு 07.08.21ல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதாக தகவல் அளித்ததை கடந்த 2023 ஜனவரியில் அளித்த பதிலில் ஏன் மறைக்க வேண்டும்? வாருங்கள் களத்திற்கு விதிமீறல் உண்டா இல்லையா எனவும், கடித போக்குவரத்தை குறைத்து களத்திற்கு வந்து உரிய நடவடிக்கை எடுத்து விதிமீறலை சரிசெய்து விவசாய நிலத்திற்கும் மற்றவர்களுக்கும் பாதிப்பில்லாமல் பொதுப்பாதையான தார்சாலையை ஒட்டி அமைத்து முற்றுப்புள்ளி வைக்குமாறும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.21 தங்களுக்கு விவசாய நிலங்கள் உள்ளதாகவும், இந்த நிலங்களில் ஓரிரு வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட மின்கம்பங்கள் தெருமுகப்பான தார்சாலையை ஒட்டி அமைக்காமல் மின் வாரிய விதிகளுக்கு புறம்பாக பாதுகாப்பற்ற முறையில் 30 வருட தென்னைமரங்களுக்கு நேர் செங்குத்தாக அடியில் விவசாய நிலத்தில் கள ஆய்வு செய்யாமல் அமைக்கப்பட்டு உள்ளன எனவும், மின்வாரிய விதிகளின்படி குறைவான செலவினம் மற்றும் குறுகிய மின்பாதையில் பாதிப்பில்லாமல் மின் இணைப்பு கொடுக்காமல் இடத்துக்காரர்கள் ஆள் இல்லாததை சாதகமாக பயன்படுத்தி முன் அனுமதி ஏதும் பெறாமல், கலந்து யோசிக்காமல் அடுத்தவர்களுக்கு இடையூறு செய்யும் நோக்கில் கம்பம் அமைக்கும் முன்பாகவே சர்வே எண் 46/4ஏ1க்குரிய இடத்தை சுற்றி தாங்கள் கம்பி வேலி போடப்பட்டு 'மரக்கன்றுகள் நட பெரிய குழிகள் பறிக்கப்பட்டுயிருந்த நிலையில் அதே குழிக்குள் கம்பத்தை நட்டது கண்டிக்கத்தக்கதாகவும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.22 உரிய மின்வாரிய அதிகாரிகள் கள ஆய்வு செய்திருந்தால் கம்பி வேலி மற்றும் பெரிய குழிகள் அவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லாமல் போயிருக்குமா? அதைத்தான் அன்றைய தலைமை செயலாளர் உயர் திரு. இறையன்பு (இஆப) அவர்கள் களப்பணி பற்றி மாவட்ட ஆட்சியகளுக்கு எழுதிய கடிதத்தில் அலுவலக கோப்பில் அகப்படாத செய்திகள் களப்பணியின்போது கண்களில் படும்' என்பதை சுட்டிக்காட்டியதாகவும் தாங்கள் கம்பம் நடும் முன்பாக கண்களில் பறித்த குழிகளில் நட்டுள்ள மரங்கள் வளர்ந்து பின்காலங்களில் இதன் தொடர்ச்சியாக மின் இணைப்பு பெற்றவர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் மின்பாதை தவறான வழியில் அமைக்கப்பட்டு உள்ளதாகவும், இது மின் வாரிய விடுகளை மீறியதாக உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.23 இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1865–ன் பிரிவு 10–ன் படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அரசு நிலமான தார்சாலையை ஒட்டி அமைக்காமல் அதிகாரம் மாதேஸ்வரன் 09.07.21ல் ஆட்சேபனையை தெரிவித்ததால் (ஆட்சேபனை தெரிவித்த மாதேஸ்வரன் என்பவருக்கு அவருடைய வீட்டு மின் இணைப்பே அவர் ஆட்சேபனை தெரிவித்த அதே திசையிலுள்ள மற்றொரு கம்பத்திலிருந்து தான் மின் இணைப்பு, கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதுமட்டுமில்லாமல் கோபால் என்பவருக்காக 04 மின் கம்பங்கள் எதிர்திசையில் அமைக்கும்போது ஆட்சேபனை கோபால் தெரிவித்த திசையோடு மட்டுமில்லாமல் எதிர்திசையில் மாதேஸ்வரனால் முறைகேடாக எடுத்துச்சென்ற வயரை கூட கம்பங்கள் அமைக்க (படங்கள்) வழிவிட அகற்ற சொல்லாமல், எதிர்திசையிலுள்ள தார்சாலையை ஒட்டி அமைக்காமல் அவ்வளவு கன கச்சிதமாக அவருடைய ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டு அவருக்கு சாதகமாகவே மின் வாரிய அதிகாரிகள் விதிகளை மீறி அடுத்தவர்களுக்கு பாதிப்பை உண்டாக்கி விட்டது காலத்தின் கொடுமையாகும்) அதன் உண்மைத்தன்மை அறியாமல் (அந்த இடத்தின் சர்வே எண்.23/3ஏ என்பது அரசு நிலமான தார்சாலை ஆகும் ஆவணங்கள் இணைத்துள்ளேன்.) அவருக்கு சாதகமாக செயல்பட்டு தவறான வழியில் அமைக்கப்பட்டு உள்ளதும் மின் வாரிய விதிகளை மீறியதாகும் எனவும், தான் அளித்த புகாரின் அடிப்படையில் மின்வாரிய அமலாக்கத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து அந்த வயரை அகற்றி விட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.24 மின் இணைப்பு எண்.536 006 714 பெற்ற திரு.கோபால் என்பவர் அவர் மின் இணைப்பு பெறும்போது மாதேஸ்வரன் ஆட்சேபனை தெரிவித்தவுடன் உதவி பொறியாளர் (இ&ப) பு.க.பாளையம் அவர்களுக்கு 09.07.21ல் எழுதிய மனுவில் தனது கிணற்று மின் இணைப்பு உள்ள மின்கம்பத்திலிருந்து என தவறான தகவல் கொடுத்துள்ளதாகவும், கோபால் என்பவர் தற்போது தான் இடம் வாங்கிய பின்னர் முதன்முதலாக வீட்டு மின் இணைப்பு பெறுகிறார் என்பதுதான் நிதர்சன உண்மை ஆக அவருடைய மனுவின் உண்மைத்தன்மையையும் கவனிக்காமல் விட்டது தவறாகும் எனவும், மின் இணைப்பு பெறும்போது தவறான தகவல்களை ஆவணங்கள் வாயிலாக கொடுத்துள்ள கோபால் என்பவர் மீது அவரே 09.07.21 அன்று ஒப்பமிட்ட மின்வாரிய

படிவம் 1ல் உள்ள 2 மற்றும் 5 விதிமுறைகளுக்கு உட்படுத்த வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.25 மின் இணைப்பு பாதை கோபால் பெற்ற பின்பு அவரிடம் இடம் வாங்கிய திருமதி ராஜாமணி தன்னுடைய இடத்திற்கு தற்காலிக மின் இணைப்பு எண் 536-008-849 பெறும்போது கோபால் அமைத்த அருகாமையிலுள்ள கம்பத்திலிருந்து வழங்காமல் 120F தூரமுள்ள கம்பத்திலிருந்து (அதாவது மாதேஸ்வரன் என்பவர் கோபால் என்பவருக்கு ஆட்சேபனை தெரிவித்த திசை) இணைப்பு (28.03.2022) வழங்கப்பட்டு பின்னர் 12.07.23ல் அவரது கணவர் திரு பொன்னுசாமி என்பவர் மின் இணைப்பு லைன் தூரமாக உள்ளது. என அருகிலுள்ள கம்பத்திற்கு இடமாற்றம் கோரி மனு செய்கிறார். அதன் வாயிலாக கோபால் பெற்ற அதே அருகிலுள்ள மின் பாதையில் உள்ள கம்பத்தில் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளதாகவும், ஆக தனக்கு மட்டுமில்லாமல் அந்த மின்பாதை வழியாக மின் இணைப்பு பெறுபவர்களுக்கும் சிக்கலாக அமைந்துள்ளதாகவும், தற்போது தாங்கள் கோரியபடி யாருக்கும் பாதிப்பில்லா வகையில் தார்சாலை ஒட்டி அமையும் பட்சத்தில் 2வது தடவையாக இடமாற்ற செலவினங்களுக்கு பொன்னுசாமி உட்படுவார் எனவும், கோபால் மின் இணைப்பு பாதை பெறும் போதே சரியான திட்டமிடல் இருந்திருந்தால் யாருக்கும் சிரமம் இருந்திருக்காது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.26 இதனால் விவசாயி ஆன தாங்கள் மட்டும் பாதிக்கபடாமல் மின் கம்பங்கள் அமைத்த பின்னரும் அதனை தொடர்ந்து மின் இணைப்பு பெற்றவர்களும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளதாகவும், ஒரு குறிப்பிட்ட நபரை திருப்திபடுத்த அரசாங்க சொத்தான மின் இணைப்பை தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பு Notification No.TNERC/DC/8/1 Dated 21.07.2004 பிரிவு (4) 2க்கு மற்றும் (5) வலையமைப்பு விரிவாக்கத் திட்டமிடலின் கட்டங்களின் vii க்கு மற்றும் (16) பணிப்பாதுகாப்பு கூறுபாடுகளுக்கு புறம்பாக நிறுவப்பட்டுள்ளது" கம்பங்கள் அமைக்கப்பெற்ற நாள் முதல் கொண்டு தற்போதைய வரை முறைகேட்டிற்கான அனைத்து ஆவணங்களையும் தாங்கள் அலுவலக மூலமாகவே பெற்று உள்ளோம்,சர்வே எண் 23/3ஏ அரசு நிலமான நிலவியல் பாதையில் கடந்த 2015-2016ஆம் ஆண்டு பெ.நா.பாளையம் ஊராட்சி ஒன்றிய பொது நிதி மூலமாக தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம்

மின் இணைப்பு வழங்கும் முன் மின்வாரிய அதிகாரிகள் ஆய்வு செய்தார்களா? என தெரியவில்லை. கம்பம் நட்டது தெரிந்த மறுநாளே தவறான வழிப்பாதையில் அமைந்துள்ளதை கண்டு எனது ஆட்சேபனையை தெரிவித்ததாகவும், இதனால் மேற்கூறிய பல்வேறு சிக்கல்களால் அதிகம் பாதிப்படைந்த தாங்கள் அது தொடர்பான ஆவணங்களை வருவாய்/மின்சாரம்/உள்ளாட்சி நிர்வாகம் உள்ளிட்ட அரசு அலுவலங்களில் நேரடி கள ஆய்வு செய்து ஆவணங்களை திரட்டி உள்ளதாகவும், இதன் காரணமாகவே சிறிது காலம் ஆயிற்று ஆகவே உடனடி உரிய நடவடிக்கை எடுத்து மின் வாரிய செலவிலே அல்லது கம்பம் அமைக்கும் போது தவறான தகவலை ஆவணம் மூலமாக எழுதி கொடுத்தவர்கள் செலவிலே மின் கம்பங்களை தார்சாலையை ஒட்டி அமைக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திரு.கோபால் த/பெ. கதிர்வேல் அவர்கள் மின் இணைப்பு வேண்டி 01.07.2021 அன்று இணையதளம் வாயிலாக உரிய வீட்டு வரி இரசீது, நில உரிமைசான்றுடன் விண்ணப்பித்து அதற்குண்டான இதர கட்டண தொகை அனைத்தும் இணையதளத்தின் மூலமாக செலுத்தியதை தொடர்ந்து அவருக்கு மின் இணைப்பு வழங்கப்படுவது தொடர்பாக சர்வே எண் 46/4A மேட்டுடையார்பாளையம் இடத்தை உதவி பொறியாளர்/இப/புத்திரகவுண்டன்பாளையம் அவர்கள் அன்றே களஆய்வு செய்து மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொண்டபோது மின் இணைப்பு வழங்கப்பட வேண்டிய இடமானது அருகில் உள்ள மின் கம்பம் அமைத்து மின் நீட்டிப்பு செய்யும் வகையில் இருந்த காரணத்தால் அதன் தொடர்பாக குறைந்தபட்ச மதிப்பீட்டிற்காக அளவீடு செய்யும் போது திரு.மாதேஸ்வரன் அவர்களின் தோட்டத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின் கம்பத்தில் அளவீடு செய்யும் போது திரு.மாதேஸ்வரன் அவர்கள் தனது தோட்டத்தில் ஏற்கனவே மின் தொடர்கள் அதிகமாக உள்ள காரணத்தினாலும் பயிர் செய்யும் போது நிலத்தில் சேதாரம் ஏற்படும் என கருதி தனக்கு இடையூறு ஏற்படா வண்ணம் செயல்படுமாறு தெரிவித்து 09.07.2021 அன்றே ஆட்சேபனை கடிதம் வழங்கியதை அடுத்து மேற்கண்ட நடவடிக்கை கைவிடப்பட்டு திரு.மாதேஸ்வரன் அவர்களின் ஆட்சேபனை குறித்து விண்ணப்பதாரர் திரு.கோபால்

அவர்களின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டு விளக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 திரு.கோபால் விண்ணப்பதாரர் அவர்கள் தன்னுடைய நிலத்திலேயே விவசாய மின் இணைப்பு எண் 536–006–338 விவசாய மின் இணைப்பு ஒன்று உள்ளது என்றும் அந்த மின் இணைப்பு வழங்கப்பட்ட மின் கம்பத்தில் இருந்து தனது வீட்டிற்கு மின் இணைப்பு நீட்டிப்பு செய்ய ஒப்புதல் தெரிவித்ததை தொடர்ந்து திரு கோபால் அவர்களது சொந்த நிலத்திலேயே வாழப்பாடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 3881/2021 சர்வே எண் 48/4Aன் படி அவருக்கு சொந்தமான நிலத்தில் அவரது ஒப்புதலின் பேரில் 4 மின் கம்பங்கள் அவரது சொந்த செலவில் அமைத்து மின் இணைப்பு நீட்டிப்பு பணிகள் முடிக்கப்பட்டு மின் இணைப்பு எண் 536–006–714, 07.08.2021 அன்று வழங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 அப்போது அந்த சர்வே 46/4A ல் உள்ள 1.28 சென்ட் நிலம் முழுவதும் திரு.கோபால் என்பவருக்கு மட்டும் சொந்தமாக இருந்ததாகவும், அந்த சமயத்தில் மேல்முறையீட்டாளர் திருமதி சாரதா, க/பெ. கார்த்திகேயன் அவர்களுக்கு அந்த 46/4A எண்ணிலோ அல்லது 46/3A சர்வே எண்ணிலோ எந்த நிலமும் சொந்தமாக இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன் பிறகு திரு.கோபால் அவர்களால் 46/4Aல் உள்ள நிலமானது பகுதியாக பிரிக்கப்பட்டு வேறு சிலருக்கு கிரயம் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதில் மேல்முறையீட்டாளர் திருமதி.சாரதா, க/பெ. கார்த்திகேயன் அவர்கள் 46/4A என்பது உட்பிரிவு செய்யப்பட்டு 46/4A1 ஆக கடந்த 05.07.2022ல் கிரயம் மூலமாக திருK.ராஜா த/பெ. கிருஷ்ணன் என்பவரிடம் இருந்து பெற்றுள்ளதாகவும், அப்படி இருக்கும் போது திரு.கோபால் வீட்டு மின் இணைப்பு பெறும் சமயத்தில் மேல்முறையீட்டாளர் திருமதி.சாரதா க/பெ. கார்த்திகேயன் அவர்களுக்கு அந்த சர்வே எண்ணில் எவ்வித சம்பந்தமே இல்லாத நிலையில் மேற்படி மேல்முறையீட்டாளரின் சகோதரர் திரு.முருகன் ஆட்சேபனை செய்ததாகவும் வேலி போடப்பட்ட இடத்தில் ஏற்கனவே தோண்டப்பட்ட குழிக்குள் கம்பம் நடபட்டதாகவும் உண்மைக்கு புறம்பாக தகவல்களை புகார் மனுவில் தெரிவித்துள்ளதாகவும், திரு.மாதேஸ்வரன் அவர்கள் ஆட்சேபனை தெரிவிக்காமல்

இருந்திருந்தால் அவரது நிலத்தில் உள்ள கம்பத்தில் இருந்துதான் மின்பாதை அமைக்கப்பட்டு தார்சாலை வழியாக 2 ஸ்பேன் லைன் கொண்டு செல்லப்பட்டு பாதையில் குறுக்காக ஒரு கம்பம் அமைக்கப்பட்டு திரு கோபால் அவர்கள் அந்த ஒரு கம்பத்திற்கு மட்டுமே பணம் செலுத்தியிருந்தால் போதும், ஆனால் திரு.மாதேஸ்வரன் அவர்கள் ஆட்சேபனை செய்ததால் மதிப்பீடு ஆனது திரு.கோபால் அவர்கள் அவர் நிலத்தில் உள்ள கம்பத்தில் இருந்து மின்பாதை அமைக்க ஒப்பு கொண்டதாலும் அதற்கான மதிப்பீட்டு தொகையை செலுத்தியதாலும் அவர் இடத்திலேயே மின் கம்பம் அமைத்து மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 திரு.மாதேஸ்வரன் அவர்களின் நிலத்தில் அமைந்த கம்பத்தை தவிர தார்சாலை வழியாக மின்பாதை அமைக்க மாற்று வழியாக கொண்டு வர வேண்டும் என்றால் சுமார் 10 ஸ்பேன் தூரத்தில் ரோட்டின் மீது அமைந்துள்ள கம்பத்தில் இருந்து தான் எடுத்து வர இயலும் இந்த சூழ்நிலையில் தான் வீட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், திரு.கோபால் அவர்களுக்கு மின் பாதை அமைக்கும் போது மேல்முறையீட்டாளர் திருமதி.சாரதா அவர்களுக்கு நிலமே சொந்தமில்லை எனவும், மேலும் அங்கு குழிகள் எதுவும் தோண்டப்படவும் இல்லை அவர்கள் தோண்டிய குழியில் கம்பம் அமைக்கப்படவில்லை எனவும், கம்பம் நடப்பட்டது தெரிந்து மறு நாளே தவறான வழியில் அமைக்கப்பட்டுள்ளதை கண்டு மேல்முறைபிட்டாளர் திருமதி. சாரதாவின் சகோதரர் திரு.முருகன் அவர்கள் ஆட்சேபனை தெரிவித்ததாக புகாரில் தெரிவித்துள்ளார். ஆனால் தவறாக கம்பமோ அல்லது மின் பாதையோ அமைக்கப்படவில்லை மேலும் மேல்முறையீட்டாளர் திருமதி.சாரதா மற்றும் அவரின் சகோதரர் திரு.முருகன் அவர்களோ மின்பாதை அமைக்கப்பட்ட சமயத்தில் அவர்களுக்கு அங்கு நிலம் ஏதும் சொந்தம் ஏதும் இல்லாத நிலையில் ஆட்சேபனை தெரிவித்ததாக புகார் மனுவில் கூறியுள்ளது உண்மைக்கு புறம்பான கூற்றாகும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 திருமதி.ராஜாமணி என்பவருக்கு வீடு கட்டுவதற்காக TF VI–ல் 25.03.2022 அன்று தற்காலிக மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், ஏற்கனவே திரு.கோபால் அவர்களின் வீட்டு மின் இணைப்பிற்கு ஆட்சேபனை தெரிவித்த திரு.மாதேஸ்வரன் அவர்கள் திருமதி.ராஜாமணி அவர்களுக்கு தற்காலிக மின் இணைப்பு வழங்க சர்வீஸ் ஒயர் அமைக்க ஒப்புகொண்டதால் அவரது நிலத்தில் அமைந்திருந்த மின் கம்பத்தில்

இருந்து சர்வீஸ் ஒயர் மூலம் TF VI (தற்காலிக மின் இணைப்பு வழங்கப்பட்டது) திருமதி.ராஜாமணி வீடு கட்டி முடித்த பின் தற்காலிக மின் இணைப்பில் இருந்து நிரந்தர மின் இணைப்பாக மாற்ற சர்வீஸ் கேபிளுக்கு பதிலாக LT மின் பாதை அமைக்க மேற்படி திரு மாதேஸ்வரன் அவர்கள் ஆட்சேபனை தெரிவித்ததால் சர்வீஸ் ஒயர் Shifting ற்கு விண்ணப்பம் கொடுத்து உரிய தொகை செலுத்தி உதவி செயற்பொறியாளர்/இப /பெ.நா.பாளையம் அவர்களிடம் உரிய அனுமதி பெறப்பட்ட பின்பு திரு.கோபால் அவர்களுக்கு வீட்டு மின் இணைப்புக்கு செல்லும் மின் பாதையின் ஒரு கம்பத்தில் இருந்து மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 புகார் மனுவில் கூறப்பட்டிருப்பது போல் மின்வாரிய விதிகளுக்கு புறம்பாகவோ அல்லது பாதுகாப்பு அற்ற முறையில் மின்பாதை எதுவும் அமைக்கப்படவில்லை எனவும், மேலும் விவசாயிகளை பாதிக்கும் வகையில் எவ்வித மின் நீட்டிப்பு பணியும் செய்யப்படவில்லை எனவும், அப்போதைய உரிமையாளரான திரு.கோபால் அவர்களின் சம்மதத்துடன் நான் அவரது நிலத்தில் மட்டும் தான் லைன் அமைக்கப்பட்டதகாவும், பொதுவாக ஒரு விவசாய நிலத்தில் அமைத்து இருக்கும் கம்பத்தில் இருந்து மின் விஸ்தரிப்பு பணிக்காக மின்பாதை அமைக்க முற்படும் போது அவர் ஆட்சேபனை தெரிவிக்கும் பட்சத்தில் அந்த வேலையை செய்ய இயலாது அதற்காக மாற்று வழி மின்பாதை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அந்த நடைமுறை தான் திரு.கோபால் என்பவருக்கு வீட்டு மின் இணைப்பு வழங்க பின்பற்றப்பட்டுள்ளதாகவும், எனவே ஒரு குறிப்பிட்ட நபரை திருப்திபடுத்த மின்பாதை அமைத்ததாக மேல்முறையீட்டாளர் கூறுவது உண்மைக்கு புறம்பானதாகும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 திரு கோபால் அவர்களின் சொந்தமான நிலத்திலேயே மின் பாதை அமைக்க ஒப்புதல் கடிதம் அளித்தமையால் இந்திய தொலை தொடரபு சட்டத்தின்படி நடவடிக்கை எழவில்லை எனவும், பொதுவாக ஒருவருக்கு சொந்தமான நிலத்தில் மின் இணைப்பு பெற மின் கம்பங்களில் மற்றும் கம்பிகள் அமைக்கப்படுமானால் அதற்கு சம்பந்தப்பட்ட நில உரிமைதாரர் மதிப்பீட்டு தொகை செலுத்த வேண்டும் என்பது தமிழ்நாடு மின் பகிர்மான கழக விதியாகும் எனவும், திருகோபால் அவர்கள் திருமதி.ராஜாமணி என்பவருக்கு தனது நிலத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்துள்ளதாகவும், அதன்

வாயிலாக 25.03.2022 அன்று திருமதி.ராஜாமணி அவர்கள் புதிய வீடு கட்டும் பணிக்காக விண்ணப்பம் செய்து தற்காலிக மின் இணைப்பு பெற்று உபயோகபடுத்தி வந்துள்ளதாகவும், இதன் நிரந்தர மின் இணைப்பை மேற்கண்ட 4 மின் கம்பத்தில் 1 கம்பம் வழியாக வழங்கப்பட்டுள்ளதாகவும், இதிலும் எந்த விதிமீறல்களும் மீறப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 திருமதி ராஜாமணி என்பவருக்கு வீடு கட்டுவதற்காக TF VI ல் 25.03.2022 அன்று தற்காலிக மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், ஏற்கனவே திரு.கோபால் அவர்களின் வீட்டு மின் இணைப்பிற்கு ஆட்சேபனை தெரிவித்த திரு.மாதேஸ்வரன் அவர்கள் திருமதி.ராஜாமணி அவர்களுக்கு தற்காலிக மின் இணைப்பு வழங்க சர்வீஸ் ஒயர் அமைக்க ஒப்புகொண்டதால் அவரது நிலத்தில் அமைத்திருந்த மின் கம்பத்தில் இருந்து சர்வீஸ் ஒயர் மூலம் TF VI (தற்காலிக மின் இணைப்பு வழங்கப்பட்டது). திருமதி.ராஜாமணி வீடு கட்டி முடித்த பின் தற்காலிக மின் இணைப்பில் இருந்து நிரந்தர மின் இணைப்பாக மாற்ற சர்வீஸ் கேபிளுக்கு பதிலாக LT மின் பாதை அமைக்க மேற்படி திரு.மாதேஸ்வரன் அவர்கள் ஆட்சேபனை தெரிவித்ததால் சர்வீஸ் ஒயர் Shifting ற்கு விண்ணப்பம் கொடுத்து உரிய தொகை செலுத்தி உதவி செயற்பொறியாளா/இப/பெ.நா.பாளையும் அவர்களிடம் உரிய அனுமதி பெறப்பட்ட பின்பு திரு.கோபால் அவர்களுக்கு வீட்டு மின் இணைப்புக்கு செல்லும் மின் பாதையின் ஒரு கம்பத்தில் இருந்து மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், மின் இணைப்பு எண் 536–008–849/TF–1A எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 திரு.கோபால் என்பவர் மின் இணைப்பு பெறும்போது "எனது கிணற்று மின் இணைப்பு" என தவறாக மனு கொடுத்துள்ளார் எனவும் ஆட்சேபனை தெரிவித்து திரு மாதேஸ்வரன் என்பவர் "அந்த நிலத்தை எனது நிலம்" என்று தவறாக தெரிவித்ததாக மனுவில் தெரிவித்துள்ளதாகவும், ஆனால் அவர்கள் இருவரும் தவறாக தகவல் எதுவும் கொடுக்கவில்லை எனவும், திரு.கோபால் அவர்கள் கூறியது போலவே கிரய ஆவண எண் 3881/23.10.2020 ஆக பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணத்தில் 46/4Aல் கிணறு உள்ளது குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பதாரர் அவர்கள் திருமதி.சாரதா கிரயம் பெற்ற ஆவண எண் 3638/05.07.2022 ஆக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் 46/4A1 என்ற சர்வே எண்ணில் கிணறு அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டு கிரயம் செய்யப்பட்டுள்ளதாகவும், அதை போலவே திரு. மாதேஸ்வரன் அவர்கள் தன் நிலத்தில்

உள்ள கம்பத்தில் இருந்து லைன் எடுத்து மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று தான் ஆட்சேபனை தெரிவித்துள்ளதாகவும், மேலும் விண்ணப்பதாரர் அவர்கள் திருமதி.சாரதாவின் கிரய ஆணையத்திலேயே சர்வே 46/4A ல் கிணறு உள்ளது தெரிவிக்கப்பட்டிருக்கும் போது அந்த ஆவணமும் திருமதி சாரதா அவர்களாலேயே உதவி பொறியாளர் / இப / புத்திரகவுண்டன்பாளையம் அவர்கள் அலுவகத்தில் வழங்கப்பட்டிருக்கும் நிலையில் திரு.கோபால் அவர்கள் தவறான மனு கொடுத்துள்ளார் என தெரிவித்திருப்பது உண்மைக்கு புறம்பானதாகும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 மேலும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கிணற்று மின் இணைப்பு எண் 536-006-338 / TF IV மின் இணைப்பு அமைந்துள்ள கம்பத்தில் இருந்து 4 கம்பங்கள் அமைக்கப்பட்டு திரு கோபால் என்பவருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், கிணறு மின் இணைப்பு அமைந்துள்ள கம்பமானது திருமதி.சாரதா அவர்கள் நிலத்தில் அமைந்துள்ளது என கூறி உதவி பொறியாளர்/இப/பு.க.பாளையம் அவர்களிடம் தெரிவித்து திருமதி சாரதா அவர்கள் நிலத்தில் அமைந்துள்ளது அடுத்த கம்பத்திற்கு அந்த கிணற்று மின் இணைப்பை மாற்றி தருமாறு கூறி திருமதி சாரதா அவர்களால் AGL Service box shifting விண்ணப்பம் அளிக்கப்பட்டு கிணற்று மின் இணைப்பு அடுத்த மின் கம்பத்திற்கு மாற்றி கொடுக்கப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளர் திருமதி.சாரதா மாற்றி அமைக்க கோரும் மின் பாதை அப்போதைய உரிமையாளர் திரு கோபால் என்பவர் தனது நிலத்தில் குறுக்காக மின் பாதை சென்றால் அவர் வீடு கட்டும் போதோ அல்லது விவசாயம் செய்யும் போது விவசாய நிலம் பாதிக்கப்படும் என்பதால் தனது நிலத்தில் ஓரமாக மின் பாதை அமைத்து தருமாறு கோரியதின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், எனவே திருமதி.சாரதா அவர்களே திரு கோபால் அவர்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு வழங்கப்பட்ட மின் பாதையிலேயே கிணற்று மின் இணைப்பு எண் 536-006-338/ TF IV AGL Service box shifting DCW category-ல் மாற்றி கொடுக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 மேலும், மின் கம்பங்களை மாற்றி அமைக்க வேண்டும் எனில் மனுதாரர் தனது சொந்த செலவிலேயும், பொறுப்பிலேயும் மதிப்பீட்டு பங்கு வைப்பு தொகை (Deposit

Contribution Works) பணிகள் மூலமாகவே நிறைவேற்றி கொள்ளுமாறு மேல்முறையீட்டாளருக்கு ஆவண வழங்குமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், மேட்டுடையார்பாளையம் கிராம சர்வே எண் 46/3A மற்றும் 46/4A1–ல் தங்களுக்கு சொந்தமான விவசாய நிலம் உள்ளதாகவும், திரு கோபால் என்பவர் கடந்த 23.10.2020 சர்வே எண் 46/4A வைத்தியகவுண்டன் புதூர், வேட்டுடையார்பாளையம் தார்சாலையை ஒட்டி மேற்கு புறத்தில் 1.28 ஏக்கர் நிலம் வாங்கி அதில் தனக்குரிய 1 ஏக்கரில் மட்டும் பிளாட்டுகளாக பிரித்து அதில் கட்டிய சிறிய அளவிலான தகர வீட்டிற்கு மின் இணைப்பு பெறும்போது அதற்கு திரு மாதேஸ்வரன் 09.07.2021–ல் உதவி பொறியாளருக்கு ஆட்சேபனை கடிதம் அளித்துள்ளதில் அவருடைய நிலத்திலிருந்து இணைப்பு பெற ஆட்சேபனை தெரிவித்ததாகவும், சட்டத்துக்கு புறம்பான ஆட்சேபனை கடிதத்தை உரிமதாரரான Field Officer ஆராயாமல் கள நிலவரத்தை வாரிய விதிகளுக்குட்பட்டு கணக்கில் கொள்ளாமல் தங்கள் அனுபவ சுவாதினத்திலிருந்த சர்வே எண் 46/4A–இல் தங்களுக்குரிய நடுவயலில் கம்பம் நடப்பட்டுவிட்டதாகவும், மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 ஆட்சேபனை தெரிவித்த மாதேஸ்வரன் என்பவருக்கு அவருடைய வீட்டு மின் இணைப்பே அவர் ஆட்சேபனை தெரிவித்த மற்றொருவரின் நிலத்திலுள்ள கம்பத்திலிருந்து தான் மாதேஸ்வரன் வீட்டிற்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதுமட்டுமில்லாமல் கோபால் என்பவருக்காக 4 மின் கம்பங்கள் சாலை மேற்கே அமைக்கும்போது மாதேஸ்வரனால் முறைகேடாக எடுத்துச்சென்ற வயரை கூட கம்பங்கள் அமைக்க வழிவிட அகற்ற சொல்லாமல், சாலையை ஒட்டி அமைக்காமல் அடுத்தவர் நிலத்தின் சர்வே எண் 46/4A வழியாக விவசாய நிலத்தில் நட்டு அடுத்தவர்களுக்கு பாதிப்பை உண்டாக்கிவிட்டதாகவும், மின்சார விதிகளுக்கு புறம்பாக பாதுகாப்பற்ற முறையில் விவசாய நிலத்தில்

அமைக்கப்பெற்ற மின் கம்பங்களை தார்சாலை ஓரம் மாற்றி அமைக்க வேண்டி மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் திரு.கோபால் அவர்கள் மின் இணைப்பு வேண்டி 01.07.2021 அன்று இணையதளம் மூலம் விண்ணப்பித்ததாகவும், அதனை தொடர்ந்து சர்வே எண் 46/4A மேட்டுடையார்பாளையம் இடத்தை உதவி பொறியாளர்/இப/புத்திரகவுண்டன்பாளையம் களஆய்வு செய்து மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொண்டபோது மின் இணைப்பு வழங்கப்பட வேண்டிய இடமானது அருகில் உள்ள மின் கம்பம் அமைத்து மின் நீட்டிப்பு செய்யும் வகையில் இருந்த காரணத்தால் அதன் தொடர்பாக குறைந்தபட்ச மதிப்பீட்டிற்காக அளவீடு செய்யும் போது திரு.மாதேஸ்வரன் அவர்கள் தனது தோட்டத்தில் ஏற்கனவே மின் தொடர்கள் அதிகமாக உள்ள காரணத்தினாலும் பயிர் செய்யும் போது நிலத்தில் சேதாரம் ஏற்படும் என கருதி ஆட்சேபனை கடிதம் வழங்கியதை அடுத்து விண்ணப்பதாரர் திரு.கோபால் அவர்களின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 திரு.கோபால் விண்ணப்பதாரர் அவர்கள் தன்னுடைய நிலத்திலேயே விவசாய மின் இணைப்பு எண் 536–006–338 ஒன்று உள்ளது என்றும் அந்த மின் இணைப்பு வழங்கப்பட்ட மின் கம்பத்தில் இருந்து தனது வீட்டிற்கு மின் இணைப்பு நீட்டிப்பு செய்ய ஒப்புதல் தெரிவித்ததை தொடர்ந்து அவரது சொந்த நிலத்திலேயே அவரது ஒப்புதலின் பேரில் 4 மின் கம்பங்கள் அவரது சொந்த செலவில் அமைத்து மின் இணைப்பு நீட்டிப்பு பணிகள் முடிக்கப்பட்டு மின் இணைப்பு எண் 536–006–714, 07.08.2021 அன்று வழங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருவதாகவும், அப்போது அந்த சர்வே எண் 46/4A இல் உள்ள 1.28 ஏக்கர் நிலம் முழுவதும் திரு.கோபால் என்பவருக்கு மட்டும் சொந்தமாக இருந்ததாகவும், அந்த சமயத்தில் மேல்முறையீட்டாளர் திருமதி சாரதா அவர்களுக்கு அந்த 46/4A எண்ணிலோ அல்லது 46/3A சர்வே எண்ணிலோ எந்த நிலமும் சொந்தமாக இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 அதன் பிறகு திரு.கோபால் அவர்களால் 46/4Aல் உள்ள நிலமானது பகுதியாக பிரிக்கப்பட்டு வேறு சிலருக்கு கிரயம் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதில் மேல்முறையீட்டாளர் திருமதி.சாரதா, க/பெ. கார்த்திகேயன் அவர்கள் 46/4A என்பது

உட்பிரிவு செய்யப்பட்டு 46/4A1 ஆக கடந்த 05.07.2022 இல் கிரயம் மூலமாக திருK.ராஜா த/பெ. கிருஷ்ணன் என்பவரிடம் இருந்து பெற்றுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளர் திருமதி சாரதா தன்னுடைய நிலத்தில் உள்ள மின்கம்பங்களை மாற்ற கூறும் ஆவணங்களை ஆராயும் போது அவருக்கு உரிமையில்லாத காலகட்டத்தில் அந்த நேரத்தில் உரிமையாளராக இருந்த திரு கோபால் என்பவர் மின் இணைப்பு பெறும்போது அவருடைய ஒப்புதலின் அடிப்படையிலேயே அவருடைய நிலத்தில் மின் கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டது தெரிய வருகிறது. அதன் பிறகு திரு.கோபால் அவர்களால் 46/4Aல் உள்ள நிலமானது பகுதியாக பிரிக்கப்பட்டு வேறு சிலருக்கு கிரயம் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதில் மேல்முறையீட்டாளர் திருமதி.சாரதா, சர்வே எண் 46/4A என்பது உட்பிரிவு செய்யப்பட்டு 46/4A1 ஆக கடந்த 05.07.2022ல் கிரயம் மூலமாக திருK.ராஜா த/பெ. கிருஷ்ணன் என்பவரிடம் இருந்து பெற்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

7.8 மேற்கண்ட வாதங்களின் அடிப்படையில் திரு.கோபால் வீட்டு மின் இணைப்பு பெறும் சமயத்தில் மேல்முறையீட்டாளர் திருமதி.சாரதா அவர்களுக்கு அந்த சர்வே எண்ணில் எவ்வித சம்பந்தமே இல்லை என்பது தெரிய வருகிறது. இதனை கேட்புரையின் போது மேல்முறையீட்டாளரும் ஒப்புக் கொண்டார். மேலும், சர்வே எண் 46/4A என்பது உட்பிரிவு செய்யப்பட்டு 46/4A1 ஆக கடந்த 05.07.2022 அன்றுதான் திருK.ராஜா த/பெ. கிருஷ்ணன் என்பவரிடமிருந்து மேல்முறையீட்டாளர் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார். அவ்வாறு உள்ள நேர்வில் அவர் கிரையம் பெறுவதற்கு முன்பே, மேற்கண்ட சர்வே எண்ணின் அப்போதைய உரிமையாளரின் ஒப்புதலின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மின் கம்பங்கள் மற்றும் மின்பாதைகளை தற்பொழுது மாற்றம் செய்ய கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

7.9 இந்நிலையில் ஏற்கனவே நிறுவப்பட்ட மின்பாதையை மேல்முறையீட்டாளர் இடமாற்றம் செய்ய விரும்பினால் அதற்கு ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும்

என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.10 மேற்கூறிய விதியை ஆராயும்போது நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய நுகர்வோர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை செலுத்த வேண்டும் எனவும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும் எனவும் அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிய வருகிறது.

7.11 எனவே நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் TNERC Supply Code Regulation 6–ன்படி – பங்கீட்டு வைப்புத்தொகை திட்டத்தின் வாயிலாக விண்ணப்பிக்குமாறும், விண்ணப்பத்தின் பேரில் மதிப்பீடு தயார் செய்து உரிய மதிப்பீட்டு தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை மாற்றிதர இயலும் என்ற நுகர்வோர் குறைதீர்மன்றம் வழங்கிய ஆணையில் மாற்றம் ஏதும் தேவையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, நிறுவப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை மேல்முறையீட்டாளர் மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின் பகிர்மான விதிமுறைகளின் படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் மாற்றியமைக்க இயலும் என்ற சேலம் மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் வழங்கிய ஆணையில் மாற்றம் இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 04/2025 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி K. சாரதா, க/பெ. M. கார்த்திகேயன், – By RPAD
கதவு எண் 118/A1, அய்யாகவுண்டர் தெரு,
வாழப்பாடி (வ), சேலம் மாவட்டம் – 636 115.

2. உதவி மின்பொறியாளர்/ புத்திரகவுண்டம்பாளையம்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
82, C(பழைய), 121 (புது) சூப்பர் வளாகம்,
புத்திரகவுண்டம்பாளையம் அட்டூர் தாலுக்கா,
சேலம் – 636 119.

3. செயற்பொறியாளர்/ இ&ப/வாழப்பாடி,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
110/22 KV SS சிங்காபுரம், வாழப்பாடி,
சேலம் மாவட்டம் – 636 115.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
**சேலம்** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
கே.என். காலனி அஞ்சல், சேலம்– 636 014.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
**தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்**
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.